

# கம்யூனிசத்தின் கோட்பாடுகள்

பிரடெரிக் எங்கல்ஸ்

தொடர்பு முகவரி:-

✉
"SAMAR"
87 , RUE DE COLOMBES
92600 - ASNIERES SUR SEINE
FRANCE.

பணம் அனுப்பவேண்டிய தபாற்கணக்கு :-

2.674.73 M
CENTRE DE CHEQUEES POSTAUX
75900 PARIS CHEQUES
FRANCE

# கம்யூனிசத்தின் கோட்பாடுகள்

கேள்வி 1: கம்யூனிசம் என்றால் என்ன?

பதில்: பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கான நிலைமைகளைப் பற்றிய கோட்பாடுதான் கம்யூனிசமாகும்.

கேள்வி 2: பாட்டாளி வர்க்கம் என்றால் என்ன?

பதில்: எந்த வர்க்கம் சமுதாயத்திலுள்ள ஏதேனுமொரு மூலதனத்திலிருந்து கிடைக்கும் லாபத்தின் மூலம் தனது வாழ்க்கைக்கான தேவைகளைப் பெறாமல், தனது உழைப்பை விற்பதன் மூலம் மட்டுமே அவையனைத்தையும் பெறுகின்றதோ, அதுவே பாட்டாளி வர்க்கமாகும்.[2] எந்த வர்க்கத்தின் சுகமும் துக்கமும், வாழ்வும் சாவும், ஏன் வாழ்க்கை முழுவதுமே உழைப்பிற்கான தேவையினைச் சார்ந்ததாகவும், அதன் காரணமாக, தொழில் நன்கு நடக்கும் காலத்தையும் தங்கு தடையற்ற போட்டியின் விளைவாக ஏற்படும் ஏற்ற தாழ்வுகளைச் சார்ந்ததாகவும் இருக்கிறதோ, அந்த வர்க்கம்தான் பாட்டாளி வர்க்கமாகும். ஒரே வார்த்தையில் கூறுவதானால், பாட்டாளி வர்க்கம் அல்லது பாட்டாளிகளின் வர்க்கம் என்பது 19-ம் நூற்றாண்டின் தொழிலாளி வர்க்கமாகும்.

கேள்வி 3: அப்படியானால் பாட்டாளிவர்க்கம் என்ற வர்க்கம் எப்போதுமே இருந்ததில்லையா?

பதில்: இல்லை. ஏழை மக்களும், தொழிலாளி வர்க்கத்தினரும் எப்போதுமே இருந்திருக்கிறார்கள். மேலும் தொழி

லாளி வர்க்கத்தினர் பெரும்பாலும் ஏழையாகவே இருந்திருக்கிறார்கள். ஆனால் எப்போதுமே நாம் மேலே குறிப்பிட்ட நிலைமைகளில் தொழிலாளிகளோ ஏழைமக்களோ வாழ்ந்திருக்கவில்லை. வேறு வகையில் கூறுவதானால், சுதந்திரமான தங்குதடையற்ற போட்டியானது இதற்கு முன்பு இல்லாதது போலவே, பாட்டாளி வர்க்கமும் எப்பொழுதுமே இருந்ததில்லை.

கேள்வி 4: பாட்டாளி வர்க்கம் எவ்வாறு தோன்றியது?

பதில்: கடந்த (18-ம்) நூற்றாண்டின் பின்பாதியில் இங்கிலாந்தில் நிகழ்ந்த தொழிற்புரட்சியினூடே பாட்டாளி வர்க்கம் தோன்றியது. இத்தொழிற்புரட்சி உலகத்திலுள்ள ஏனைய நாகரிகமடைந்த நாடுகளிலும் பரவிற்று. இத்தொழிற் புரட்சியானது, நீராவி இயந்திரம், பல்வேறு நூற்பு இயந்திரங்கள், விசைத்தறி இவற்றை தொடர்ந்து இதர பல்வேறு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் தோன்றியது. இந்த இயந்திரங்கள் விலை உயர்ந்தவையாக இருந்தமையால் பெரும் முதலாளிகள் மட்டுமே இவற்றை வாங்க முடிந்தது. இவ்வகை இயந்திரங்கள் முந்தைய உற்பத்தி முறையை மாற்றியமைத்ததோடு, அவ் உற்பத்தி முறையோ சம்பந்தப்பட்ட தொழிலாளர்களையும் வெளியேற்றியது. ஏனென்றால், அந்தத் தொழிலாளர்கள் தங்களது திறமையற்ற ராட்டைகளையும் கைத்தறிகளையும் கொண்டு உற்பத்தி செய்த பொருட்களைவிட மிகச் சிறந்த, மலிவான பொருட்களை இந்த இயந்திரங்கள் உற்பத்தி செய்தன.

இந்த இயந்திரங்கள், தொழில்கள் அனைத்தையும் பெருமுதலாளிகளின் கைகளில் ஒப்படைத்ததோடு, தொழிலாளர்களின் சாதாரண உடைமைகளான கருவிகள், கைத்தறிகள் ஆகியவற்றைப் பயனற்றதாகச் செய்தன. எனவே, வெகு விரைவிலேயே முதலாளிகள் அனைத்தையும் தங்களது உடைமைகளாக ஆக்கிக் கொண்டனர்; தொழிலாளிகளுக்கு எதுவுமே மிஞ்சவில்லை. இவ்வாறு

துணி உற்பத்தி தொழிலில் தொழிற்சாலை முறை புகுத்தப்பட்டது.

இயந்திரங்களைப் புகுத்துதல், தொழிற்சாலை முறை ஆகியவற்றுக்கு ஊக்கமளிக்கப்பட்டவுடனேயே, இந்த முறையானது அனைத்து தொழில்துறைகளிலும், குறிப்பாக துணி, அச்சுத் தொழில், மட்பாண்டம், உலோகப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழில்களிலும் வெகு விரைவில் பரவத் தொடங்கியது. தனிப்பட்ட தொழிலாளிகளிடையே உழைப்பு மேலும் மேலும் பிரிவினை செய்யப்பட்டது. எனவே ஒரு பொருளை முழுமையாக முன்பு செய்து வந்த ஒரு தொழிலாளி இப்போது அதில் ஒரு பகுதியை மட்டுமே செய்தான். இந்த உழைப்புப் பிரிவினை, பொருட்களை விரைவாக உற்பத்தி செய்து மிக மலிவாக வழங்குவதை சாத்தியமாக்கிற்று. இம்முறையானது ஒரு தொழிலாளியின் செல்முறையை மிக எளிதானதாகவும் இயந்திர ரீதியானதாகவும் சுருக்கியது. இதே வேலையை ஒரு இயந்திரம் மேலும் சிறப்பாகச் செய்ய முடியும். இவ்வகையில், நெசவு தொழில் முன்பு வீழ்ந்தது போல, அனைத்துத் தொழில்களும் ஒன்றன் பின் ஒன்றாக நீராவி இயந்திரம், தொழிற்சாலை முறை ஆகியவற்றின் ஆதிக்கத்தில் வீழ்ந்தன.

இதே சமயத்தில் இவை அனைத்தும் பெருமுதலாளிகளின் கரங்களில் வீழ்ந்தன. இங்கும்கூட, தொழிலாளிகள், அவர்களுக்கிருந்த சுதந்திரத்தின் கடைசித் துளியும் பறிக்கப்பட்டிருந்தார்கள். படிப்படியாக, முறையாக நடைபெறும் உற்பத்திப் பொருட்களோடு கூடவே, கைத்தொழில்களும் தொழிற்சாலை முறையின் ஆதிக்கத்தின் கீழ் பெருமளவிற்கு வீழ்ந்தன. ஏனெனில், இங்கும்கூட பெரு முதலாளிகள் பெரிய தொழிற்கூடங்களை அடுத்தடுத்து நிறுவியதன் மூலம், சிறிய முதலாளிகளை மேலும் அதிகமான அளவில் ஒதுக்கித் தள்ளினர். பெரிய தொழிற்கூடங்களை நிறுவியதால் செலவு பெருமளவு குறைக்கப் பட்ட

தோடு உழைப்பும் தொழிலாளிகளிடையே விரிந்த முறையில் பிரிவினை செய்ய முடிந்தது.
இந்த முறையில்தான் அனைத்து நாகரிகமடைந்த நாடுகளிலும் கிட்டத்தட்ட அனைத்து விதமான உழைப்பும் தொழிற்சாலையினுள் நடத்தப்படுவது அமலுக்கு வந்தது. அதாவது, உழைப்பின் அனைத்துப் பிரிவுகளிலும் கைத்தொழிலும் உற்பத்தித் துறைத் தொழிலும் பெருந்தொழில்களால் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதன் விளைவாக முன்னாள் நடுத்தர வர்க்கங்கள், மிகச் சிறிய முதலாளிகளாக இருந்த கைவினைஞர்கள் ஆகியோரை முன்னெப்போதுமில்லாத அளவிற்கு ஒழிக்கப்பட்டனர், தொழில்களது முந்தைய நிலைமை முழுமையாக மாற்றப்பட்டிருக்கிறது. மேலும் ஏனைய வர்க்கங்கள் அனைத்தையும் படிப்படியாக தன்னோடு இணைத்துக் கொண்டு இரண்டு புதிய வர்க்கங்கள் உருவாகியிருக்கின்றன. அவையாவன;

1. பெருமுதலாளிகளின் வர்க்கம். இவர்கள் எல்லா நாகரிகமடைந்த நாடுகளிலும் உயிர் வாழ்வதற்குத் தேவையான அனைத்து சாதனங்களையும் மற்றும் இப்படிப்பட்ட சாதனங்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருட்கள் மற்றும் கருவிகள் (இயந்திரங்கள், தொழிற்சாலைகள்) ஆகியவற்றையும் கிட்டத்தட்ட ஏற்கனவேயே தனிப்பட்ட முறையில் தங்கள் வசம் வைத்துள்ளனர். இந்த வர்க்கம் முதலாளி வர்க்கம் அல்லது பூர்ஷ்வாக்கள் ஆவார்கள்.
2. முற்றிலும் எதையுமே சொந்தமாக கொண்டிராதவர்களின் வர்க்கம். எனவே, இந்த வர்க்கத்தினர் உயிர் வாழ்வதற்கான தேவைகளுக்குப் பரிவர்த்தனையாக முதலாளி வர்க்கத்திற்குத் தங்களது உழைப்பை விற்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இந்த வர்க்கத்தினர் பாட்டாளி வர்க்கம் அல்லது பாட்டாளிகள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

கேள்வி 5: பாட்டாளிகளின் உழைப்பு முதலாளி வர்க்கத்திற்கு விற்கப்படும் இச்செயல் எப்படிப்பட்ட நிலைமைகளில் நடைபெறுகிறது.

பதில்: மற்ற சரக்குகளைப் போலவே உழைப்பும் ஒரு சரக்காகும். மற்ற சரக்குகளின் விலையை நிர்ணயிக்கும் அதே விதிகளின் அடிப்படையில்தான் உழைப்பின் விலையும் நிர்ணயிக்கப்படுகிறது. பெருந்தொழிலின் ஆதிக்கத்தின் கீழ் அல்லது சுதந்திரமான போட்டியின் ஆதிக்கத்தின்கீழ் இந்த இரண்டுமே ஒரே விஷயத்தைத்தான் குறிக்கின்றன என்பதை நாம் பின்னர் பார்ப்போம். ஒரு சரக்கின் விலை எப்போதுமே சராசரியாக அந்தச் சரக்கின் உற்பத்திச் செலவுகளுக்குச் சமம். எனவே உழைப்பின் விலையும், உழைப்பின் உற்பத்திச் செலவும் சமமானதேயாகும். உழைப் பின் உற்பத்திச் செலவில், தொழிலாளியை வேலை செய்யத் தகுதி உள்ளவர்களாக ஆக்கவும், தொழிலாளி வர்க்கம் மடிந்து விடாமல் தடுக்கவும் தேவைப்படும் செலவுகள் திட்டவட்டமாக அடங்கியுள்ளன. இந்த நோக்கத்திற்கு அவசியமானதை காட்டிலும் அதிகமாக, தொழிலாளி அவருடைய உழைப்பிற்காகப் பெறமாட்டார். எனவே உழைப்பின் விலை அல்லது கூலியானது மிகவும் குறைவான தாக, குறைந்த பட்சமாக, வாழ்க்கையை நடத்திச் செல் வதற்குத் தேவைப்படும் அளவிற்கே இருக்கும். ஆனாலும் வியாபாரம் ஒரு நேரத்தில் மோசமாகவும், மற்றொரு நேரத்தில் நன்றாகவும் இருப்பதால், தொழிற்சாலை உடைமையாளர் அவருடைய சரக்கிற்கு ஒரே நேரத்தில் அதிகமாகவும், மற்றொரு நேரத்தில் குறைவாகவும் பெறு வதைப் போலவே தொழிலாளியும் ஒரே நேரத்தில் அதிக மாகவும் மற்றொரு நேரத்தில் குறைவாகவும் பெறுகிறார். ஆனால் நல்ல நேரமாக இருந்தாலும், கெட்ட நேரமாக இருந்தாலும் தொழிற்சாலை உடைமையாளர் தனது சரக் கிற்கு அதனுடைய உற்பத்திச் செலவை காட்டிலும் மிக அதிகமாகவோ அல்லது மிகக் குறைவாகவோ பெறுவ தில்லை. அதைப் போலவே தொழிலாளியும் சராசரியாகப் பார்க்கும் போது அவருடைய உழைப்பின் குறைந்த பட்ச உற்பத்திச் செலவைக் காட்டிலும் மிக அதிகமாகவோ அல்லது மிகக் குறைவாகவோ பெறுவதில்லை.

உற்பத்தியின் எல்லாப்பிரிவுகளும் பெருந்தொழில்களால் எந்த அளவிற்கு அதிகமாக எடுத்துக் கொள்ளப்படுகிறதோ அதே அளவிற்கு கூலிகள் பற்றிய இந்தப் பொருளாதார விதியும் மிக அதிகமாகச் செயல்முறைக்கு வரும்.

கேள்வி 6: தொழிற்புரட்சிக்கு முன்பு எப்படிப்பட்ட உழைக்கும் வர்க்கங்கள் இருந்தன.

பதில்: சமுதாய வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களைப் பொறுத்து உழைக்கும் வர்க்கங்கள், சொத்துடைத்த மற்றும் ஆளும் வர்க்கங்களோடு பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு வகையான உறவுகளை வைத்துக் கொண்டு பண்டைக்காலத்தில் உழைக்கும் மக்கள்—இப்போதும் பல பிற்பட்ட நாடுகளில் ஏன், அமெரிக்காவின் தென்பகுதி யிலும் கூட இருப்பதைப் போலவே—எஜமானர்களின் அடிமைகளாக இருந்தார்கள். மத்திய காலத்தில் அவர்கள் தற்போதும் ஹங்கேரி, போலந்து, ருஷ்ய நாடுகளில் இருப் பதைப் போலவே நிலப்பிரபுக்களின் பண்ணையடிமை களாக இருந்தார்கள். மத்தியகாலத்திலும், தொழிற்புரட்சி நிகழும் காலம் வரையிலும் நகரங்களில் குட்டி பூர்ஷ்வா எஜமானர்களுக்குச் சேவை செய்து வந்த திறமை பெற்ற தொழிலாளிகளாக இருந்தார்கள். படிப்படியாக உற்பத்தி வளர்ச்சியடைந்த போது, பெரு முதலாளிகளால் வேலைக்கு அமர்த்தப்பட்ட உற்பத்திமுறைத் தொழிலாளிகள் தோன்றி னார்கள்.

கேள்வி 7: பாட்டாளி எவ்வகையில் அடிமையிலிருந்து வேறுபடுகிறான்?

பதில்: அடிமை முற்றிலுமாக விற்கப்பட்டு விடுகிறான். பாட்டாளியோ தன்னை நாட்கணக்கிலும் மணிக்கணக்கிலும் விற்றுக் கொள்ள வேண்டும். தனியொரு அடிமை, ஒரே ஒரு எஜமானனின் சொத்தாவான்; எஜமானனின் நலனைக் கருதியேயாயினும் அடிமைக்கு ஒரு வாழ்க்கை எவ்வளவு

மோசமானதாயிருப்பினும் உத்திரவாதம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஒரு பாட்டாளி, முதலாளி வர்க்கம் முழுவதற்கு மான சொத்தாவான். இந்த வர்க்கத்தில் யாராவது ஒரு வருக்குப் பாட்டாளியின் உழைப்பு தேவைப்படும்போது மட்டுமே வாங்கிக் கொள்கிறார். எனவே அந்தத் தனி பாட்டாளிக்கு வாழ்க்கை உத்திரவாதம் செய்யப்படவில்லை. பாட்டாளி வர்க்கம் முழுவதற்கு மட்டுமே இந்த வாழ்க்கை உத்திரவாதம் செய்யப்பட்டுள்ளது. அடிமை, வியாபாரப் போட்டிக்கு வெளியே இருக்கிறான். பாட்டாளியோ, போட்டி யிலேயே இருந்து அதன் ஏற்றத்தாழ்வுகளைஅனுபவிக்கிறான். அடிமை, நாகரிக சமுதாயத்தின் உறுப்பினராகக் கருதப்படா மல் ஒரு பொருளாக மட்டுமே கணக்கிடப்படுகிறான். பாட்டாளியோ, ஒரு மனிதனாக, சமூகத்தின் உறுப்பினனாக மதிக்கப்படுகிறான். அடிமைக்கு பாட்டாளியைவிட வாழ்க்கை உத்திரவாதம் நன்றாகவே இருக்கலாம்; ஆனால் பாட்டாளியோ சமுதாய வளர்ச்சியில் உயர்ந்த கட்டத்தைச் சேர்ந்தவனாக இருப்பதோடு அடிமையைவிட உயர்ந்த நிலையைச் சேர்ந்தவனாக இருக்கிறான். தனியுடைமை உறவுகளில் அடிமை தனது அடிமை உறவை அழித்துவிட்டுத் தானாகவே பாட்டாளியாக மாறுகிறான். ஆனால் பாட் டாளியோ பொதுவாக தனியுடைமையையே அழிப்பதன் மூலமே தன்னை விடுவித்துக் கொள்ள முடியும்.

கேள்வி 8 : பாட்டாளி எவ்வகையில் பண்ணை அடிமையி லிருந்து வேறுபடுகிறான்?

பதில் : பண்ணையடிமை, உற்பத்திக் கருவியான ஒரு சிறு துண்டு நிலத்தை உடைமையாகக் கொண்டு அதைப் பயன் படுத்திக் கொள்கிறான். இதற்குப் பதிலாக தனது உற்பத்தி யில் ஒரு பகுதியையோ அல்லது தனது உழைப்பையோ (தனது எஜமானருக்கு) அளிக்கிறான். பாட்டாளியோ மற்றொருவருக்குச் சொந்தமான உற்பத்திக் கருவியைக் கொண்டு வேலை செய்கிறான். இதற்குப் பதிலாக உற்பத்தி யில் ஒரு பகுதியைப் பெறுகிறான். பண்ணையடிமை கொடுக்

கிறான்; பாட்டாளியோ பெறுகிறான். பண்ணையடிமைக்கு வாழ்க்கை உத்திரவாதம் உண்டு. பாட்டாளிக்கோ அது இல்லை. பண்ணையடிமை போட்டிக்கு வெளியே இருக்கிறான். பாட்டாளியோ போட்டியில் இணைந்திருக்கிறான். பண்ணையடிமை நகரத்திற்கு ஓடிச்சென்று அங்கு ஒரு கைவினைஞனாக மாறலாம். அல்லது தனது எஜமானருக்கு உழைப்பையோ உற்பத்திப் பொருளையோ அளிப்பதற்குப் பதிலாக பணத்தை அளித்து அதன் மூலம் ஒரு சுதந்திரமான குத்தகைக்காரனாக மாறலாம். அல்லது தனது எஜமானனை துரத்தியடித்துவிட்டு சுருக்கமாகக் கூறுவதானால் ஏதோ ஒரு வகையில் சொத்துடைத்த வர்க்கத்திலும் போட்டியிலும் நுழைந்து தானே சொத்து படைத்தவனாக மாறலாம். இவ்வாறு பண்ணையடிமை தன்னை விடுவித்துக் கொள்கிறான். பாட்டாளி, போட்டியையும், தனிமையுடைமையும் எல்லாவிதமான வர்க்க வேறுபாடுகளையும் அழிப்பதன் மூலம் தன்னை விடுவித்துக் கொள்கிறான்.

கேள்வி 9 : பாட்டாளி கைவினைஞனிலிருந்து எவ்வகையில் வேறுபடுகிறான்?[3]*

கேள்வி 10 : பட்டறைத் தொழிலாளியிலிருந்து பாட்டாளி எவ்வகையில் வேறுபடுகிறான்?

பதில் : 16 ஆம் நூற்றாண்டிலிருந்து 18 ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த பட்டறைத் தொழிலாளி, தனது உற்பத்திக்கருவியை அவனது தறி குடும்பத்து இராட்டைகள், அவரது ஓய்வுநேரங்களில் பயிரிடும் ஒரு சிறு துண்டு நிலம் போன்றவற்றை சொந்தமாகக் கொண்

*இந்த இடத்தில் எங்கெல்ஸ் தனது கைப்பிரதியில் அரைப்பக்கம் வெற்றிடமாக விட்டு வைத்திருந்தார். இதற்கான பதிலை குறிப்பு எண் 3-ல் காணவும். இதன் பின்னணித் தகவலை குறிப்பு எண் 1-ல் காண்க.

—பதிப்பாசிரியர்கள்

டிருந்தான். பாட்டாளிக்கோ இது போன்ற எதுவும் இல்லை. பட்டறைத் தொழிலாளி பெரும்பாலும் எப்போதும் கிராமப் புறத்திலேயே வாழ்கிறான்; தனது நிலப்பிரபு அல்லது எஜமானரிடம் தந்தை வழி உறவு முறையையே கொண்டுள்ளான். பாட்டாளியோ பெரும்பாலும் நகர்ப்புறத்திலேயே வாழ்கிறான்; அவனுக்கும் அவனது முதலாளிக்கும் இருக்கும் உறவு வெறும் பண உறவு மட்டுமே ஆகும். பெருந்தொழில் அமைப்பின் விளைவாக, பட்டறைத் தொழிலாளி தனது தந்தைவழி உறவுகளிலிருந்து துண்டிக்கப்பட்டு, அதுவரையில் வைத்திருந்த சொத்துக்களையும் இழந்து, அதன் விளைவாக பாட்டாளியாக மாறுகிறான்.

கேள்வி 11 : தொழிற்புரட்சி மற்றும் முதலாளி, பாட்டாளி என்ற சமுதாயப் பிரிவினை ஆகியவற்றின் உடனடி விளைவுகள் யாவை?

பதில் : முதலாவதாக, இயந்திர உழைப்பின் விளைவாக, தொழில் முறை உற்பத்திப் பொருட்களின் விலைகள் மேலும் மேலும் குறைந்ததோடு, உலகின் எல்லா நாடுகளிலும் நிலவி வந்த, உடல் உழைப்பின்மீது நிறுவப்பட்டிருந்த பழைய தொழில்முறை, முழுமையாக அழிக்கப்பட்டது. வரலாற்று ரீதியான வளர்ச்சியிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்த பட்டறைத் தொழில் முறை உற்பத்தி நிலவி வந்த அரைகுறை நாகரிக நாடுகள் அனைத்தும் அவற்றின் தனிமையிலிருந்து வலுக் கட்டாயமாக வெளியே இழுத்து வரப்பட்டன. அந்நாடுகள் இங்கிலாந்தின் மலிவான பொருட்களை வாங்கி, தங்கள் நாட்டின் பட்டறைத் தொழிலாளிகள் அழிந்து போவதை அனுமதித்தன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் வளர்ச்சியென்பதையே அறியாதிருந்த நாடுகள், உதாரணமாக இந்தியா போன்றவை, முழுமையாக புரட்சிகரமானதாக மாற்றப்பட்டன. சீனாவும்கூட அப்படிப் பட்டதொரு புரட்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

இன்று, இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்படும் ஒரு புதிய இயந்திரம் ஒரே ஒரு ஆண்டுக்குள் பல லட்சக்கணக்கான

சீனத் தொழிலாளிகள் தங்கள் வாழ்க்கையையே இழக்கும்படி செய்துவிடும் நிலைமைக்கு வந்துள்ளது. இவ்வகையில் பெருந் தொழிலானது உலகத்திலுள்ள அனைத்து மக்களையும் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளச் செய்துள்ளது. எல்லா உள்ளூர்ச் சந்தைகளையும் சேர்த்து ஒரே உலகச் சந்தையாக மாற்றியிருக்கிறது. அதன் மூலம் எல்லா இடங்களிலும் நாகரிகத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிவகுத்திருக்கிறது. அதன் மூலம் நாகரிகமடைந்த நாடுகளில் நிகழும் அனைத்துச் செயல்களும் ஏனைய நாடுகளில் பிரதிபலிக்கச் செய்துள்ளன. எனவே, இங்கிலாந்து அல்லது பிரான்ஸ் நாட்டின் தொழிலாளர்கள் இப்போது தங்களை விடுவித்துக் கொண்டால், அது மற்ற நாடுகளில் புரட்சிகளை உருவாக்கும். அந்தப் புரட்சிகள் உடனடியாகவோ அல்லது சிறிது நாட்கள் கழித்தோ அங்குள்ள தொழிலாளர்களையும் விடுதலைக்கு இட்டுச்செல்லும்.

இரண்டாவதாக, எங்கெல்லாம் பெருந்தொழில் அமைப்பு பட்டறைத் தொழிலை மாற்றுகிறதோ, அங்கு நடைபெறும் தொழிற்புரட்சியானது முதலாளி வர்க்கத்தை வளர்க்கிறது. அதன் செல்வத்தையும் பலத்தையும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்று, நாட்டின் முன்னணி வர்க்கமாக மாற்றுகிறது. இதன் விளைவாக, இவ்வாறு நிகழும் அனைத்து இடங்களிலும் முதலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை தனது கையில் எடுத்துக்கொண்டு அதற்கு முன்பிருந்த ஆளும் வர்க்கங்களான பிரபுத்துவத்தையும், கில்டு மாஸ்டர்களையும், இவர்களிருவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏகபோக முடியாட்சியையும் வெளியேற்றியது.

நிலச் சொத்தினை விற்பனை செய்வதையும், நிலச் சொத்தில் உரிமை கொண்டாடுவதையும், பிரபுக்களின் சலுகைகளையும் ஒழித்ததன்மூலம் முதலாளி வர்க்கம், அரசாட்சி மற்றும் பிரபுக்களின் அதிகாரத்தை ஒழித்தது. அனைத்து கில்டுகள் மற்றும் கைவினைக்கான சலுகைகளை ஒழித்ததன்மூலம் கில்டு மாஸ்டர்களின் அதிகாரத்தையும் அது அழித்தது. இவை

களுக்குப் பதிலாக சுதந்திரப்போட்டி என்ற நிலைமை உருவாக்கப்பட்டது. அதாவது யார் வேண்டுமாலும் எந்தத் தொழிலை வேண்டுமானாலும் செய்யும் உரிமை கொண்ட சமுதாயம் உருவாகியது. இதில் உள்ள ஒரே தடை தேவை யான அளவு மூலதனம் இன்மையே. இந்தச் சுதந்திரமான போட்டியின் அறிமுகமானது, அன்றிலிருந்து சமுதாயத்தின் உறுப்பினர்கள், அவர்கள் வைத்திருக்கும் மூலதனம் எந்த அளவு ஏற்றத்தாழ்வாய் உள்ளதோ அந்த அளவுக்கு அவர்கள் ஏற்றத்தாழ்வோடு இருப்பார்கள் என்ற பொது அறிவிப்பைச் செய்தது. இதன் மூலம் முதலாளிகளான பூர்ஷ்வாக்கள் சமுதாயத்தின் முதல் வர்க்கமாக மாறினார்கள். பெருந் தொழில் அமைப்பை உருவாக்க சுதந்திரப் போட்டி முறை அவசியமாகும். ஏனெனில், இந்தச் சமுதாய அமைப்பில் மட்டுமே பெருந்தொழிலானது தன்னை வளர்த்துக் கொள்ள முடியும்.

முதலாளி வர்க்கம், பிரபுக்கள் மற்றும் கில்டுமாஸ்டர்களின் சமுதாய அதிகாரத்தை அழித்ததுடன் அவர்களின் அரசியல் அதிகாரத்தையும் சேர்த்து அழித்தது. சமுதாயத்தின் முதன்மையான வர்க்கமாக உருவாகும்போதே அது தன்னை அரசியலிலும் முதன்மையான வர்க்கம்தான் என்று அறிவித் துக் கொண்டது. சட்டத்தின் முன்பு முதலாளிகளின் சமத்துவம் சுதந்திரப் போட்டிக்கான சட்ட ரீதியான அங்கீகாரம் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்ட பிரதிநிதித்துவ முறையை அறிமுகப் படுத்துவதன் மூலமும், ஐரோப்பிய நாடுகளில் அரசியல் சட்ட ரீதியான முடியாட்சி அமைப்பு என்ற வடி வத்தையும் மேற்கொண்டதன் மூலமும் முதலாளி வர்க்கம் இவ்வாறு செய்தது. இந்த அரசியல் சட்ட ரீதியான முடியாட்சியில் குறிப்பிட்ட அளவு மூலதனத்தைக் கொண்டுள்ள வர்களே, அதாவது முதலாளிகளே வாக்களிக்க முடியும். இந்த முதலாளித்துவ வாக்காளர்கள் பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுப்பார்கள். இந்த முதலாளிகளின் பிரதிநிதிகள்—புதிய வரிகளுக்கு ஓட்டளிக்க மறுக்கும் தங்களது உரிமையின்

மூலம்—ஒரு முதலாளித்துவ அரசாங்கத்தை தேர்ந்தெடுக் கிறார்கள்.

மூன்றாவதாக, தொழிற் புரட்சியானது, முதலாளிகளை வளர்ப்பது போலவே, அதே அளவிற்கு எல்லா இடங்களிலும் பாட்டாளிகளையும் உருவாக்குகிறது. முதலாளிகள் பணம் படைத்தவர்களாக வளரும் அதே விகிதத்தில் பாட்டாளிகளும் தங்களது எண்ணிக்கையில் வளருகிறார்கள். பாட்டாளிகள் மட்டுமே முலதனத்தால் வேலை வாங்கப்பட முடியும் என்ப தாலும், பாட்டாளியை வேலைக்கு வைத்துக் கொள்வதன் மூலம் மட்டுமே, மூலதனத்தை அதிகரிக்க முடியும் என்பதா லும், பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சியானது, மூலதனம் வளர்ச்சியடையும் அதே வேகத்தில் நடைபெறுகிறது. அதே நேரத்தில், இச்செயலானது, தொழில்கள் லாபகரமாக நடை பெறும் பெரும் நகரங்களில் முதலாளிகளையும் பாட்டாளி களையும் ஒன்றிணைக்கிறது. பெருந்திரளான மக்களை ஒரே இடத்தில் வைத்திருப்பதன் மூலம் தங்களது சொந்த பலத் தைப் பற்றிய உணர்வையும் பாட்டாளிகளுக்கு அளிக்கிறது. மேலும், நான் முன்பே குறிப்பிட்டது போன்ற இந்த நடை முறை வளர்ச்சியடைவதாலும், உடல் உழைப்பை வெளி யேற்றும் இயந்திரங்கள் மேலும் மேலும் கண்டுபிடிக்கப் படுவதாலும் பெருந்தொழில்கள் கூலியை மிகக் குறைந்த அவல நிலைக்குக் கொண்டு செல்கிறது. இவ்வாறாக பாட் டாளிகளின் வாழ்க்கை நிலைமைகளை மேலும் மேலும் தாங்க வொண்ணாததாக மாற்றுகிறது. இதன் மூலம் ஒரு புறத்தில், பாட்டாளி வர்க்கத்தின் வெறுப்பு வளருகிறது. மறுபுறத்தில் அதன் சக்தியும் வளருகிறது. இதன் மூலம் தொழிற் புரட்சியானது, பாட்டாளிவர்க்க சமுதாயப் புரட்சிக் கான வழியை ஏற்படுத்துகிறது.

கேள்வி 12 : தொழிற்புரட்சியின் இதர விளைவுகள் என்ன ?

பதில் : நீராவி இயந்திரத்தையும், மற்ற இயந்திரங்களை யும் கொண்டு, குறைந்த செலவிலும், குறுகிய நேரத்திலும்,

தொழில் உற்பத்தி தங்கு தடையற்று வளர்வதற்கான தொழிலுற்பத்தி சாதனங்களைப் பெருந்தொழில் உருவாக்கியது. உற்பத்திக்கான வாய்ப்பு இவ்வாறு எளிதாக்கப்பட்ட பெருந்தொழிலோடு இணைந்த சுதந்திரப் போட்டியானது மிகவும் உச்சக்கட்ட வடிவங்களை எடுத்தது; முதலாளிகள் திரளாக தொழில் துறையில் ஈடுபட்டனர்; இதனால் உபயோகிக்க முடிந்ததைவிடவும் அதிகமான பொருட்கள், மிகக் குறுகிய காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டன. இதன் விளைவாக, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்பட முடியாமல், வியாபார மந்தம் என்று கூறப்படும் நிலை உருவாயிற்று. தொழிற்சாலை மூடப்பட வேண்டியதாயிற்று. அவற்றின் உரிமையாளர்கள் ஓட்டாண்டிகளாயினர். தொழிலாளர்கள் உண்ண உணவின்றி வாடினர். ஆழமான தொரு துன்பமே எல்லா இடங்களிலும் ஆட்சி செய்யலாயிற்று. சிறிது நாட்களுக்குப் பிறகு, அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருந்த பொருட்கள் விற்பனையாயின; தொழிற்சாலைகள் மீண்டும் ஓடத்துவங்கின; கூலிகள் உயர்ந்தன; தொழில் முன்பிருந்ததைவிட நன்றாக நடைபெறலாயிற்று. மீண்டும் பெருமளவில் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கு முன்பே அது முன்பு சென்ற அதே வழியில் செல்கின்ற ஒரு புதிய நெருக்கடி உருவாயிற்று.

இந்த (19-ம்) நூற்றாண்டு துவங்கியதிலிருந்தே தொழில் நிலைமையானது செழிப்பான காலத்திற்கும், நெருக்கடியான காலத்திற்குமிடையே ஊசலாடிக் கொண்டிருக்கிறது. பெரும்பாலும் ஒவ்வொரு ஐந்து அல்லது ஆறு வருடங்களுக்கு ஒரு முறை ஒரு புது நெருக்கடி தோன்றியிருக்கிறது. இந்த நெருக்கடி தன்னோடு கூடவே தொழிலாளர்களுக்கு மிகப்பெரும் துன்பத்தையும், பொதுவான புரட்சிகரமான புயலையும் கொண்டு வந்ததோடு, தற்போதுள்ள அமைப்பு முழுவதற்கும் மிகப்பெரும் அபாயத்தையும் கொண்டு வந்தது.

கேள்வி 13 : திரும்பத் திரும்ப நிலவும் இத்தகைய நெருக் கடிகளைத் தொடர்ந்து என்ன நிகழும் ?

பதில் : முதலாவதாக, பெருந்தொழில் அமைப்பானது, தனது துவக்க காலத்தில் சுதந்திரமான போட்டியை உரு வாக்கிய போதிலும் அது சுதந்திரப் போட்டியைவிட அதிக மாக வளர்ந்து விட்டது. பெருந்தொழில் அமைப்பைப் பொறுத்த வரையில், போட்டியும், தொழிலுற்பத்தியின் தனி நபர் ரீதியான அமைப்புகளும் அதற்கு ஒரு விலங்காகவே மாறிவிட்டது. அந்த விலங்கை அது உடைத்தெறிய வேண்டும்; உடைத்தெறியவும் செய்யும். இப்போதுள்ள நிலைமையிலேயே பெருந் தொழில் அமைப்பு தொடர்ந்து நடைபெற்று வந்தால் அது ஏழு வருடங்களுக்கு ஒருமுறை நிகழும் பொது நெருக்கடியின் ஊடேயே செயல்பட வேண்டி யிருக்கும். ஒவ்வொரு முறையும் நாகரிகம் முழுவதையும் அச்சுறுத்துதல் மற்றும் பாட்டாளிகளைத் துன்பத்தில் ஆழ்த் துவதோடு மட்டுமின்றி பெரும்பாலான முதலாளிகளையும் அழித்துவிடும்.

எனவே, ஒன்று பெருந்தொழில் அமைப்பைக் கைவிட வேண்டும்—அது நிச்சயமாக இயலாத ஒன்று—அல்லது இந் நெருக்கடி முழுமையான ஒரு புதிய சமுதாய அமைப்பு அவசியமாகும்படி செய்கிறது. அவ்வாறான முற்றிலும் புதிய சமுதாய அமைப்பில் ஒருவரோடொருவர் போட்டி போட்டு வளரும் தொழிற்சாலை அதிபர்கள் இருக்க முடி யாது; அதற்கு மாறாக, நிர்ணயிக்கப்பட்டதொரு திட்டத் திற்கு ஏற்பவும், அனைவரது தேவைகளுக்கு ஏற்பவும் சமு தாயம் முழுவதும் உற்பத்தியை மேற்கொள்ளும்.

இரண்டாவதாக, பெருந்தொழிலில் அமைப்பும், அதனால் சாத்தியமாக்கப்பட்ட வரம்பற்ற உற்பத்தியும், ஒரு புதிய சமுதாய அமைப்பை உருவாக்க முடியும். அந்த அமைப் பில், வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை அனைத்தும் உற்பத்தி செய்யப்படும். சமுதாயத்தின் உறுப்பினர்கள்

தங்களை வளர்த்துக் கொள்ள உதவி செய்யும். முழுமை யான சுதந்திரத்தோடு தனது சக்திகளையும், திறமைகளை யும் பயன்படுத்த உதவும். எனவே, இன்றைய சமூகத்தில் எல்லாவிதமான துன்பங்களையும், எல்லா விதமான பொரு ளாதார நெருக்கடிகளையும் ஏற்படுத்துகின்ற இதே பெருந் தொழிலின் தன்மை வேறொரு விதமான சமுதாய அமைப் பில் இந்தத் துன்பத்தையும் ஏற்றத் தாழ்வுகளையும் ஒழித்துக் கட்டி விடுகிறது. இவ்வகையில், கீழ்க்கண்ட விஷயங்கள் மிகத் தெளிவாக நிரூபிக்கப்படுகின்றன.

1. இப்போதுள்ள தீமைகள் அனைத்திற்கும் ஒரே காரணம் தற்போதுள்ள நிலைமைகளுக்குப் பொருத்தம் அற்றதாக உள்ள சமுதாய அமைப்பேயாகும்.

2. ஒரு புதிய சமுதாய அமைப்பின் மூலம் இத்தீமைகளை முற்றிலும் ஒழிப்பதற்கான வழிகள் கைவசமுள்ளன.

கேள்வி 14 : இது எப்படிப்பட்டதொரு சமுதாய அமைப்பாக இருக்க வேண்டும்?

பதில் : புதிய சமுதாய அமைப்பானது, அனைத்திற்கும் மேலாக, தொழில் நடத்துவதையும், உற்பத்தியின் அனைத் துப் பிரிவுகளையும் போட்டி போட்டுவரும் தனி நபர்களின் கையிலிருந்து எடுக்கும். அதற்குப் பதிலாக, ஒட்டு மொத்த மாக, சமுதாயம் முழுவதன் சார்பாக, இப்படிப்பட்ட உற் பத்திப் பிரிவுகள் அனைத்தும் ஒரு பொதுத் திட்டத்திற்கு ஏற்ப சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களின் பங்கேற் போடு செயல்படும் ஒரு அமைப்பை ஏற்படுத்தும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அது போட்டியை ஒழித்து அந்த இடத்தில் இணக்கமான ஒற்றுமையை ஏற்படுத்தும். இதற்கும் மேலாக, தனிநபர்களால் நடத்தப்படும் தொழில் தவிர்க்க முடியாதபடி தனியுடைமைக்கு இட்டுச் செல்லும் என்பதாலும், போட்டி என்பதே தனிப்பட்ட தனிமையுடை மையாளர்களால் நடத்தப்படும் தொழில்களின் தன்மையும்

வடிவமுமாகும் என்பதாலும், தனிச்சொத்தை, தனிநபர் தொழிலை மேற்பார்ப்பதிலிருந்தும், போட்டியிலிருந்தும் பிரிக்க முடியாததாகிறது. ஆகவே, தனியுடைமையும் அழிக்கப்பட்டாக வேண்டும். அந்த இடத்தில், உற்பத்திக் கருவிகளைப் பொதுவாகப் பயன்படுத்தும் முறையும், பொதுவான உடன்பாட்டின் அடிப்படையில் அனைத்து உற்பத்திப் பொருட்களும் வழங்கப்படுவதும் —ஒரே வார்த்தையில் கூறுவதானால்—பொருட்களின் சமூக ரீதியான உரிமை எனப் படுவது உருவாக்கப்படவேண்டும். உண்மையில் தனியுடைமையை ஒழிப்பதென்பது, தொழில் வளர்ச்சியினால் அவசியமாகி விட்ட சமுதாய அமைப்பு மாறுதலின் மிகக் குறுகிய மற்றும் மிக முக்கியமான அறிகுறியே ஆகும். எனவே, இது கம்யூனிஸ்டுகளால் பிரதான கோரிக்கையாக முன் வைக்கப்படுவது சரியானதே.

கேள்வி 15 : எனவே, இதற்கு முன்னால் தனி உடைமையை ஒழிப்பதென்பது இயலாத ஒன்றா ?

பதில் : மிகச் சரியானதே. சமுதாய அமைப்பில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றமும் சொத்து உறவுகளில் ஏற்படும் ஒவ்வொரு புரட்சியும் புதிய உற்பத்தி சக்திகள் தோன்றுவதன் விளைவாகவே ஏற்படுகிறது. ஏனெனில், இந்த உற்பத்தி சக்தியானது பழைய சொத்து உறவுகளுக்குப் பொருத்தமற்றதாகும். தனிச்சொத்துடைமை இவ்வகையில் தான் தோன்றியது. அது எல்லாக் காலத்திலும் இருந்திருக்கவில்லை. மத்திய காலத்தின் இறுதிப் பகுதியில் இயந்திர உற்பத்தி என்ற வடிவத்தில் ஒரு புதிய உற்பத்தி வகை தோன்றியது. இந்த உற்பத்தி வகையானது, அப்போதிருந்த பிரபுத்துவ, கில்டு சொத்துக்களுக்கு இணக்கமற்றதாகி விட்டபோது, பழையசொத்து உறவுகளுக்கும் மேலாக வளர்ந்து விட்டதால் ஒரு புதிய சொத்து வடிவத்தை, தனியுடைமையை உருவாக்கியது. இயந்திர உற்பத்திக்கும், பெருந்தொழிலின் ஆரம்ப நிலைக்கும் தனியுடைமையே சாத்தியமானதொரு சொத்து வடிவமாகும்; அதனடிப்படை

யிலான சமுதாய அமைப்பே சாத்தியமானதொரு சமுதாய அமைப்பாக இருந்தது.

எல்லோருக்கும் போதுமான அளவு உற்பத்தி செய்ய முடியாதபோது, சமுதாய மூலதனத்தை அதிகரிக்க உபரியான உற்பத்தியோடு, உற்பத்தி சக்திகளை மேலும் வளர்ப்பதற்காகவும் கூட, உற்பத்திசக்திகளின் மீது ஆட்சி செலுத்தி வரும் ஒரு ஆதிக்க வர்க்கமும், ஏழ்மையான ஒடுக்கப்பட்ட ஒரு வர்க்கமும் இருந்தாக வேண்டும். உற்பத்தி வளர்ச்சியின் நிலையைப் பொறுத்தே இந்த வர்க்கங்கள் அமைந்திருக்கும். விவசாயத்தையே நம்பியிருந்த மத்திய காலப் பகுதி நமக்கு நிலப்பிரபுவையும் பண்ணை அடிமையையும் அளித்தது ; மத்திய காலத்தின் பிற்பகுதியிலிருந்த நகரங்கள் கில்டு மாஸ்டர்களையும் ஜெர்னிமென்களையும், நாட் கூலிக்காரனையும் நமக்குக் காட்டியது; பதினேழாம் நூற்றாண்டு, உற்பத்தியாளனையும் உற்பத்திமுறைத் தொழிலாளியையும் கொண்டதாக இருந்தது. 19ம் நூற்றாண்டு பெருந்தொழிலதிபரையும் பாட்டாளியையும் கொண்டிருந்தது.

இதுவரையிலிருந்த உற்பத்தி சக்திகள் அனைவருக்கும் போதுமானவற்றை உற்பத்தி செய்யும் அளவுக்கு வளர்ச்சியடைந்ததாக இருந்ததில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த உற்பத்தி சக்திகளுக்கு தனியுடைமையானது ஒரு விலங்காக, ஒரு தடையாக மாறிவிட்டது என்பதும் தெளிவாகிறது. எனினும், தற்போது பெருந்தொழில் வளர்ச்சியானது முதலாவதாக, மூலதனத்தையும் உற்பத்தி சக்திகளையும் உருவாக்கி, இதற்கு முன்னிராத அளவுக்கு வளர்ந்திருக்கும் போதும், குறுகிய காலத்தில் எல்லையற்ற முறையில் அவற்றைப் பெருக்குவதற்கான வழிகளைக் கொண்டிருக்கும் போதும்; இரண்டாவதாக, இந்த உற்பத்தி சக்திகள் ஒரு சில முதலாளிகளின் கைகளிலேயே குவிந்திருக்கும் அதே நேரத்தில், மக்களில் பெரும்பகுதியினர் பாட்டாளி வர்க்கத்தின் அணிகளுக்குள் மேலும் மேலும்

விழுந்து கொண்டிருக்கும் போதும், முதலாளிகளின் செல்வம் பெருகிக் கொண்டிருக்கும் அதே விகிதத்தில் பாட்டாளி களின் வாழ்க்கை நிலைமை மேலும் மோசமானதாகவும், தாங்கவொண்ணாததாகவும் மாறிக்கொண்டிருக்கும் போதும், மூன்றாவதாக, மிகவும் சக்திவாய்ந்த எளிதில் விரிவடையக் கூடிய உற்பத்தி சக்திகள் தனியுடைமையை விடவும், முத லாளி வர்க்கத்தை விடவும் அதிக அளவில் வளர்ந்து விட்ட தால், அவை இடையறாது சமுதாய அமைப்பில் பலாத்கார மிக்க கலவரங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கும் இந்த நிலைமைகளில் மட்டுமே தனியுடைமையை அழிக்க முடியும் என்பதோடு, அவசியமானதாகவும் ஆகிவிட்டது.

கேள்வி 16 : அமைதியான முறையில் தனியுடைமை ஒழிப்பை நிறைவேற்ற முடியுமா ?

பதில் : அவ்வாறு நடந்தால் அது விரும்பத்தக்கதேயாகும். அவ்வாறு நடப்பதை எதிர்ப்பவர்களில் கடைசியானவர்கள் கம்யூனிஸ்ட்டுகளே என்பது நிச்சயம். சதிகள் அனைத்தும் பயனற்றவை என்பதோடு, அபாயகரமானவை என்பதையும் கம்யூனிஸ்டுகள் அறிவார்கள். விருப்பப்படியோ, சர்வாதிகார முறையிலோ, புரட்சிகள் உருவாக்கப்படுவதில்லை என்பதும் கூட அவர்களுக்குத் தெரியும். அதற்கு மாறாக, எல்லா நேரங்களிலும், எல்லாக்காலங்களிலும், அவ்வப்போது நில வும் நிலைமைகளின் உடனடி விளைவாகவே அவை தோன்று கின்றன. இதுவும் தனிப்பட்ட கட்சிகள் அனைத்து வர்க்கங் கள் ஆகியவற்றின் விருப்பத்திற்கும், உத்தரவிற்கும் சாரா மலேயே அமைகிறது. அதே வேளையில், பாட்டாளி வர்க் கத்தின் வளர்ச்சி எல்லா நாகரிக நாடுகளிலும் பலாத்கார மாக ஒடுக்கப்படுகிறது என்பதையும், இதன் மூலம் கம்யூ னிஸ்டுகளின் எதிரிகள் தங்கள் முழு பலத்தையும் பயன் படுத்தி புரட்சியை ஊக்குவித்து வருகிறார்கள் என்பதையும் அவர்கள் காண்கிறார்கள். இவ்வாறு ஒடுக்கப்பட்டு வரும் பாட்டாளி வர்க்கம் இறுதியில் புரட்சியை நோக்கி வலுக் கட்டாயமாக செலுத்தப்பட்டால் கம்யூனிஸ்டுகளான நாங்கள்

பாட்டாளிகளின் நலனுக்காக இன்று வார்த்தைகளால் என்ன செய்து வருகிறோமோ அதைச் செயல் முறையில் செய்வோம்.

கேள்வி 17 : ஒரே அடியில் தனியுடைமையை அழித்துவிட முடியுமா ?

பதில் : முடியாது. ஒரு பொதுமைச் சமுதாயத்தை உருவாக்கத் தேவையான அளவிற்கு எப்படி ஒரேயடியாக இப்போதுள்ள உற்பத்தி சக்திகளை பெருக்க முடியாதோ, அதைப் போலவே இதுவும் இயலாத ஒன்றாகும். எனவே, நிச்சயமான முறையில் நெருங்கிக் கொண்டிருக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சியானது, நடப்பிலுள்ள சமுதாயத்தைப் படிப்படியாக மாற்றி, போதுமான அளவிற்கு உற்பத்தி முறைகள் உருவாக்கப்பட்ட பின்னரே தனியுடைமையை அழிக்கும்.

கேள்வி 18 : இந்தப் புரட்சியின் போக்கு எவ்வாறு இருக்கும் ?

பதில் : எல்லாவற்றிற்கும் மேலாக, அது ஜனநாயக பூர்வமான ஒரு அரசியல் சட்டத்தை உருவாக்கும். அதன் மூலம் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தை நிறுவும். மக்கள் தொகையில் பாட்டாளிகள் பெரும்பான்மையாக இருக்கும் இங்கிலாந்தில் அதை நேரடியாகவே தோற்றுவிக்கும். மக்களில் பெரும்பான்மையோர் பாட்டாளிகள் மட்டுமே இல்லாமல், பாட்டாளி வர்க்கத்தின் அணியை நோக்கி வருகின்ற, தங்களது அரசியல் நன்மைகளுக்கும் பாட்டாளி வர்க்கத்தையே நம்பியிருக்கின்ற, அதன் விளைவாக பாட்டாளி வர்க்கத்தின் கோரிக்கைகளுடன் தங்களை இணைத்துக் கொள்கின்ற சிறு விவசாயிகளும், குட்டி முதலாளிகளும் இருக்கும் பிரான்ஸிலும், ஜெர்மனியிலும் மறைமுகமாக உருவாக்கும். இது இரண்டாவது போராட்டத்தையும் உருவாக்கும். எனினும்

இதன் விளைவானது, பாட்டாளி வர்க்கத்திற்கு வெற்றியாகவே முடியும்.

தனியுடைமைக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான ஒரு வழியாகவும், பாட்டாளி வர்க்கத்திற்கு வாழ்க்கையை உத்திரவாதப் படுத்தவும், ஜனநாயகத்தை உடனடியாகப் பயன்படுத்த முடியாவிட்டால் அந்த ஜனநாயகமானது பாட்டாளி வர்க்கத்திற்கு மதிப்பற்ற ஒன்றாகவே அமையும். தற்போதுள்ள உறவுகளின் அவசியமான விளைவுகளாக உருவாகியுள்ள நடவடிக்கைகளில் முக்கியமானவை கீழ்க் கண்டவையேயாகும்.

1. படிப்படியாக அதிகரிக்கும் வரிவிதிப்புகள், கடுமையான பரம்பரை சொத்து வரிகள், சகோதர, விகோதர வழிகளில் பரம்பரை சொத்தை பெறுவது ஒழித்தல், கட்டாயக் கடன்கள் மற்றும் பல்வேறு வழிகளின் மூலமும் தனியுடைமையைக் கட்டுப்படுத்துவது.

2. நில உடைமையாளர்கள், தொழிற்சாலை முதலாளிகள் ரயில்வே, கப்பல் தொழில் திமிங்கலங்கள் போன்றோரின் சொத்துக்களை அரசுத் துறைத் தொழில் போட்டியின் மூலமும், கடன் பத்திரவடிவத்தில் நஷ்டஈடு அளிப்பதன் மூலமும் படிப்படியாகப் பறிமுதல் செய்வது.

3. பெரும்பான்மையான மக்களுக்கெதிரான நாடு கடத்தப் பட்டவர்கள், கலகக்காரர்கள் போன்றோரின் உடைமைகளை பறிமுதல் செய்தல்.

4. உழைப்பை ஒழுங்கமைத்தல் அல்லது அரசுக்குச் சொந்தமான நிலங்களிலும், தொழிற்சாலைகளிலும் தொழிற் கூடங்களிலும், பாட்டாளிகளுக்கு வேலை கொடுத்தல்; அதன் மூலமும் தொழிலாளர்களுக்கிடையே ஏற்படும் போட்டிக்கு முடிவுகட்டி, தொழிற்சாலை உரிமையாளர்களை—அவர்கள் நிலைத்து நிற்கும் வரையிலும்—அரசு கொடுக்கும்

அதே உயர்ந்த சம்பளத்தைத் தொழிலாளர்களுக்கு வழங்கும் படி நிர்ப்பந்தித்தல்.

5. சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தனி யுடைமை முழுமையாக அழிக்கப்படும் வரையிலும், வேலை செய்வதற்கான சமமான பொறுப்பை நிர்ணயிப்பது; தொழில் படைகளை குறிப்பாக விவசாயத்திற்காக உருவாக்குவது.

6. அரசின் மூலதனத்தோடு ஒரு தேசிய வங்கியை நடத்தி, அதன்மூலம் கடன் மற்றும் நிதிமுறையை அரசின் கை களுக்குள் கொண்டுவந்து மையப்படுத்துவது; தனியார் வங்கி கள் மற்றும் வங்கி உடைமையாளர்கள் ஆகியோரை ஒடுக் குவது.

7. தேசிய உடைமையாக்கப்பட்ட தொழிற்சாலைகள், தொழிற்கூடங்கள் ரயில்வேக்கள் மற்றும் கப்பல் தொழிலின் எண்ணிக்கையைஅதிகரித்தல்; புதிய நிலங்களில் பயிர் செய் தல்; ஏற்கனவே பயிர் செய்யப்பட்டு வரும் நிலங்களை மேம்படுத்துதல்; நாட்டின் வசமுள்ள மூலதனமும் உழைப்புச் சக்தியும் வளரும் அதே விகிதத்தில் மேற்கூறிய இவ்வ அனைத்தையும் அதிகரிக்க வேண்டும்.

8. தாயின் பராமரிப்பிலிருந்து குழந்தைகள் விலக்கக்கூடிய நிமிடத்திலிருந்து, அவர்கள் அனைவரையும் தேசிய நிறு வனங்களில் தேசத்தின் செலவில் பயிற்றுவிப்பது; உற்பத்தி யோடு இணைந்த கல்வியை அளித்தல்.

9. அரசு நிலங்களில் கட்டிடங்கள் கட்டுவது; தொழிலி லும் விவசாயத்திலும் ஈடுபட்டுள்ள குடிமக்கள் பிரிவுகளுக் கான குடியிருப்புகளுக்காக பெரும் மாளிகைகளை நிர்மாணிப்பது; கிராமப்புற, நகர்புற நிலைமைகளில் உள்ள ஒரு சார்பு நிலைமைகளையும் பிற்பட்ட நிலைமைகளையும் தவிர்த்து அவர்களின் வாழ்க்கையை ஒன்றிணைப்பது.

10. மாவட்டங்களில் உள்ள சுகாதாரமற்ற மோசமான பொருட்களைக் கொண்டு கட்டப்பட்ட குடியிருப்புகள் அனைத்தையும் இடிப்பது.

11. திருமண உறவினாலோ அல்லது அதற்குப் புறம்பாகவோ பிறந்த குழந்தைகளுக்குச் சமமான பரம்பரை உரிமையை வழங்குவது.

12. எல்லாவித போக்குவரத்து சாதனங்களையும் தேசத்தின் பிடிக்குள் கொண்டு வருவது.

இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் உடனடியாக நிறைவேற்றி விட முடியாது என்பது உண்மைதான். எனினும் முதல் நடவடிக்கையானது மற்றவற்றைத் தன் பின்னே அழைத்து வரும். தனியுடைமையின் மீது தீவிரமான முதல் தாக்குதல் துவங்கப்பட்ட உடனேயே, மூலதனம் அனைத்தையும், விவசாயம் அனைத்தையும், தொழில்கள் அனைத்தையும் அரசின் கைகளுக்குள் கொண்டு வருவதை அதிகப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு , பாட்டாளி வர்க்கம் ஆளாவதோடு, அது மேலும் மேலும் செல்ல வேண்டி வரும். முன்னால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் அனைத்துமே இந்த குறிக்கோளை நோக்கியதாகவே இருக்கும். அவை மிகவும் நடைமுறை சாத்தியமானதாக மாறிவிடுவதோடு, அவற்றை மையப்படுத்தும் விளைவுகள் பாட்டாளி வர்க்கத்தின் உழைப்பின் மூலம் நாட்டின் உற்பத்தி சக்திகள் பெறுகின்றன, அதே அளவில் வளரும். இறுதியாக, மூலதனம் அனைத்தும் உற்பத்தி அனைத்தும், பரிவர்த்தனைகள் அனைத்தும் தேசத்தின் கைகளுக்குள் கொண்டு வரப்படும்போது தனியுடைமை தன் போக்கிலேயே மறைந்துவிடும்; பணமானது தேவையற்ற ஒன்றாக மாறிவிடும்; பழைய சமூக உறவுகள் உதிர்ந்து விழுமளவிற்கு உற்பத்தியானது அதிகமாவதோடு மனிதர்களும் மிகவும் மாறுதலடைந்தவர்களாகவும் இருப்பார்கள்.

கேள்வி 19: இந்தப் புரட்சியானது ஒரேயொரு நாட்டில் மட்டும் நடைபெற முடியுமா?

பதில்: முடியாது. உலகச் சந்தையை உருவாக்கியதன் மூலம், பெருந்தொழில் அமைப்பானது, உலக மக்கள் அனை வரையும், குறிப்பாக நாகரிகமடைந்த நாட்டு மக்களை, ஏற்கனவேயே ஒருவரோடொருவர் நெருக்கமான உறவு கொள்ளும்படி செய்துள்ளது. இதன் விளைவாக, மற்றவர் களுக்கு ஏற்படும் எந்தவொரு நிகழ்ச்சியிலிருந்தும் எவரும் தனித்து இருக்க முடியாது. மேலும், நாகரிகமடைந்த நாடுகளில், முதலாளிகள் மற்றும் பாட்டாளி வர்க்கம் ஆகிய இரண்டு வர்க்கங்களை மட்டுமே, சமூகத்தின் தீர்மானகர மான இரண்டு வர்க்கங்களாக மாற்றி, அவற்றினிடையே நிகழும் போராட்டத்தை அக்காலத்தின் முக்கியமான போராட்டமாக மாற்றி, அவற்றின் சமுதாய வளர்ச்சியை ஒன்றிணைத்துள்ளது.

எனவே, கம்யூனிஸ்ட் புரட்சியானது ஒரு தேசம் தழுவிய தாக மட்டுமே இருந்து விடாது. அது ஒரே நேரத்தில் நாகரிகமடைந்த நாடுகள் அனைத்திலும் குறிப்பாகச் சொல்வ தானால், இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளில் நிகழும். இந்தப் புரட்சியானது, அந்த நாடுகள் ஒவ்வொன்றிலும் அந்த நாடு கொண்டுள்ள மிகவும் வளர்ச்சியடைந்த தொழில் துறை, மிகுந்த செல்வம், முக்கிய மான பெருந்திரளான உற்பத்திச் சக்தி ஆகியவற்றைப் பொறுத்து மிகவும் விரைவாகவோ அல்லது மிகவும் மெது வாகவோ உருவாகும்.

எனவே, இந்தப் புரட்சியானது ஜெர்மனியில் மிகவும் மெதுவாகவும், அதிகமான தடைகளைச் சந்தித்தும் முன் னேறும்; இங்கிலாந்தில் மிக விரைவாகவும் எளிதாகவும் நடைபெறும். இந்தப் புரட்சியானது உலகத்தின் மற்ற நாடுகளில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி, அந்த நாடு களில் இது வரையிலிருந்த வளர்ச்சிப் போக்கை தலைகீழாக

மாற்றித் தீவிரப்படுத்தும். இப்புரட்சி எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகவும் இதன் காரணமாக உலகளாவியதாக வும் இருக்கும்.

கேள்வி: 20: தனியுடைமையை இறுதியாக அழித்த பின் ஏற்படும் விளைவுகள் எத்தகையதாக இருக்கும்?

பதில்: சமூகமானது, தனியார் முதலாளிகள் கைகளிலிருந்து உற்பத்திச் சக்திகள் அனைத்தையும் வணிகச்சாதனங்கள் அனைத்தையும், உற்பத்தி பரிமாற்றம், விநியோகம் ஆகிய வற்றையும் எடுத்துக் கொள்ளும். கையிலுள்ள வளங்கள் மற்றும் சமுதாயம் முழுவதற்குமான தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையிலான ஒரு திட்டத்தின்படி, அவற்றை சமுதா யமே நிர்வகிக்கும். எல்லாவற்றிலும் மிக முக்கியமாக இந்த வகையில், இப்போதுள்ள சமுதாயத்தில் பெருந் தொழில் அமைப்பை நடத்துவதனால் ஏற்பட்டுள்ள தீய விளைவுகள் அனைத்தும் ஒழிக்கப்பட்டுவிடும். அதன் பிறகு நெருக்கடிகள் ஏதுமிருக்காது.

விரிவுபடுத்தப்பட்ட உற்பத்தி —இதுவே, இப்போதுள்ள சமுதாய முறைமையில் அதிக உற்பத்தியாகவும் சமுதாயத் தின் துன்பங்கள் அனைத்திற்கும் காரணமாகவும் இருக்கிறது. போதுமானதாக இல்லாமல், மேலும் மேலும் விரிவுபடுத்த வேண்டிய தேவை உண்டாக்கும். துன்பத்தை உருவாக்கு வதற்கு மாறாக, அதிக உற்பத்தியானது, சமுதாயத்தின் குறைந்தபட்சத் தேவைகளுக்கும் மேலாகச் சென்று, அனை வரது தேவைகளையும் திருப்திகரமாக நிறைவேற்றுவதற் கான உத்திரவாதமாகவும் மாறும்; புதிய தேவைகளையும் அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிகளையும் ஒரே நேரத்தில் உருவாக்கும்; புதிய முன்னேற்றத்திற்கானதொரு நிபந்தனையாகவும் ஊக்கச் சக்தியாகவும் இருக்கும். இது வரையில் சமுதாய முறைமையை, குழப்பத்திற்கு உள்ளாக்கி யதைப்போல் அல்லாமல், இந்த முன்னேற்றத்தை அடையும்.

தனியுடைமையின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பெருந் தொழில் அமைப்பானது, தற்போதுள்ள அளவைவிட அதிக மான அளவுக்கு முன்னர் உற்பத்தியில் நேர்ந்தது போல் விரிவுபடுத்தப்படும். இந்தத் தொழில் வளர்ச்சியானது, அனைவரது தேவைகளையும் நிறைவேற்றும் அளவுக்கு பெருமளவு உற்பத்தி பொருட்களை சமுதாயத்திற்கு அளிக்கும். தனியுடைமையின் ஆதிக்கத்தினாலும், நிலப் பிரிவினையினாலும் துன்பத்திற்கு ஆளாகியுள்ள விவசாயத் துறையிலும் அவ்வாறே நிகழும்.

தற்போதுள்ள முன்னேற்றங்களும், விஞ்ஞானச் செயல் முறை களும் நடைமுறைப் படுத்தப்பட்டு, ஒரு புத்தம் புதிய முன்னேற்றத்தைக் குறிப்பதாக மாறுவதோடு, சமுதாயத் திற்கு பெருமளவிலான உற்பத்திப் பொருட்களை அளிக்கும். இவ்வாறு பெருமளவில் உற்பத்தியாகும் பொருட்களைக் கொண்டு, சமுதாயமானது அதன் உறுப்பினர்கள் அனை வரது தேவைகளையும் நிறைவேற்ற முடியும். ஒன்றுக் கொன்று எதிரான, வேறுபட்ட வர்க்கங்களைக் கொண்ட சமுதாயப் பிரிவினையானது தேவையற்றதாகிவிடும்; தேவை யற்றதாக மாறுவதோடு மட்டுமன்றி, உண்மையில் புதிய சமுதாய முறைமைக்கு இணக்கமற்ற ஒன்றாகவும் இருக்கும். உழைப்புப் பிரிவினையால் தோன்றி நிலவும் வர்க்கங்களும், உழைப்புப் பிரிவினை என்று இதுவரையில் அழைக்கப்பட்டு வந்த வடிவமும் முழுமையாக மறைந்து விடும்.

நாம் குறிப்பிட்ட அளவிற்கு தொழில் உற்பத்தி மற்றும் விவசாய உற்பத்திகளை நிறைவேற்ற இயந்திரச் சாதனங் களோ, இரசாயனப் பொருட்களோ மட்டுமே போதுமான தல்ல. இந்தச் சாதனங்களை இயக்குகின்ற மக்களின் திறனும் அதே அளவிற்கு வளர்ச்சி அடைய வேண்டும். கடந்த (பதினெட்டாம்) நூற்றாண்டில் விவசாயிகளும், பட்டறைத் தொழிலாளர்களும் பெருந்தொழில் அமைப் பிற்குள் கொண்டு வரப்பட்டபோது தங்களது வாழ்க்கைப்

போக்கு முழுவதையும் மாற்றிக் கொண்டு, வேறுபட்ட மனிதர்களாக மாறியதைப் போலவே, அதேபோன்று, சமுதாயம் முழுவதாலும் நடைபெறும் உற்பத்திக்கான பொது இயக்கத்திற்கும், அதன் விளைவாக உற்பத்தியில் ஏற்படுகின்ற புதிய வளர்ச்சிக்கும், முற்றிலும் வேறுபட்ட தொரு மனிதர்கள் தேவைப்படுகிறார்கள். அவர்களை அது உருவாக்கவும் செய்யும்.

இன்று ஒவ்வொரு தனிநபரும் உற்பத்தியின் தனி ஒரு பிரிவுக்கு என ஒதுக்கப்பட்டுள்ளார்; அதில் கட்டுண்டுள் ளார்; அதனால் சுரண்டப்படுகிறார்; மேலும் அவரது ஆற்றல்களில் மற்றவற்றையெல்லாம் ஒதுக்கிவிட்டு ஏதேனும் ஒரு ஆற்றலை மட்டுமே வளர்த்துக் கொள்கிறார்; ஒட்டு மொத்த உற்பத்தியில் ஒரு பிரிவை மட்டுமே அல்லது அப்பிரிவின் ஒரு சிறு பிரிவை மட்டுமே அறிந்துள்ளார். இத்தகைய தனிநபர்களைக் கொண்ட சமுதாயத்தின் மக்க ளால் உற்பத்தியின் கூட்டு நிர்வாகத்தை நடத்திச் செல்ல இயலாது.

தற்போதுள்ள பெருந்தொழில் அமைப்புங்கூட, இத்தகைய மனிதர்களைப் பயனற்றவர்களாகவே கருதுகிறது.

ஒட்டுமொத்த சமுதாயத்தால் இயக்கப்படும் கூட்டு நிர்வாக தொழில்துறை, பல்துறைத் திறமைகளையும், உற்பத்தி முறையை அதன் முழுத்தன்மையோடு காணும் திறமையை யும் கொண்ட மனிதர்களையே எதிர்பார்க்கிறது. ஒரு மனிதனை விவசாயியாகவும், மற்றொருவரை செருப்பு தைக்கும் தொழிலாளியாகவும், மூன்றாமவரைத் தொழிற் சாலைத் தொழிலாளியாகவும், நான்காமவரை பங்கு மார்க்கெட்டை இயக்குபவராகவும் மாற்றிய உழைப்புப் பிரிவினையானது, இயந்திரங்களால் தகர்க்கப்பட்டுவிட்ட தோடு, முழுமையாக மறைந்தும் விடும்.

இளைஞர்கள் உற்பத்திமுறை அனைத்தையும் விரைவாக அறிந்து கொள்வதற்கும் சமுதாயத்தின் தேவைக்கேற்பவும்

தங்கள் விருப்பத்திற்கேற்பவும் உற்பத்தியின் ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவிற்கு மாறுவதற்கும், அவர்களுக்கு கல்வி வகை செய்கிறது. இன்றைய உழைப்புப் பிரிவு ஒவ்வொரு தனிமனிதனின் மீதும் திணித்துள்ள ஒரு சார்புத் தன்மையிலிருந்து இந்தக் கல்வி அவர்களை விடுவிக்கும்.

கம்யூனிஸ அடிப்படையில் உருவாக்கப்படும் ஒரு சமுதாயமானது, அதன் உறுப்பினர்களுக்கு, அவர்கள் பல வகையில் வளர்ச்சி அடைந்த தங்களது திறமைகளை பல்வேறு வகைகளில் பயன்படுத்தவும் வாய்ப்பளிக்கும். ஆனால் இவ்வாறு நிகழும்போது, வர்க்கங்கள் அவசியத்தின் விளைவாகவே மறைந்து விடும். இம்முறையில் ஒருபுறத்தில், கம்யூனிஸ அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள சமுதாயம், வர்க்கங்கள் இருப்பதற்கு இணக்கமற்றதாக ஆகிவிடும்; மற்றொரு புறத்தில், இத்தகைய சமுதாயத்தை உருவாக்குவதே வர்க்க வேற்றுமைகளை அகற்றுவதற்கான வழிகளை உருவாக்கும்.

இதைத் தொடர்ந்தாற்போல், நகரத்திற்கும் கிராமப்புறத்திற்கும் இடையே உள்ள முரண்பாடும் இதைப் போன்றே மறைந்து விடும். விவசாயமும், தொழில் உற்பத்தியும், இரு வேறுபட்ட வர்க்கங்களுக்குப் பதிலாக, ஒரே வகையான மக்களால் நடத்தப்படும். இவ்வாறு நடைபெறுவது வெறும் பொருளாயதக் காரணமாக இருந்தாலும், இதுவே கம்யூனிஸ முறையிலான இணைப்புக்குரிய நிபந்தனையாகும்.

விவசாய மக்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப் படுவதும், அதே நேரத்தில் நகரங்களில் தொழிலாளிகள் திரண்டு நிற்பதும், விவசாயம், தொழிலுற்பத்தி ஆகிய இரண்டுமே வளர்ச்சியற்றதொரு நிலைமையில் மட்டுமே நடைபெறும். இதனால் சமுதாய வளர்ச்சி தடைபடுகிறது என்பதை தற்போதே காண முடியும்.

தற்போதுள்ள உழைப்புப் பிரிவினையை அகற்றுவதன் மூலமும் தொழிற்கல்வியின் மூலமும் சமுதாயத்தின் அனைத்து

உறுப்பினர்களின் திறமைகளையும் முழுமையாக வளர்ப்பதன் மூலமும் உலக முழுவதிலும் உற்பத்தி செய்யப்படும் கேளிக்கைப் பொருட்களை, உலக முழுவதிலும் பகிர்ந்தளிப்பதன் மூலமும் நகரத்திற்கும் கிராமப் புறத்திற்குமிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதன் மூலமும், உற்பத்திச் சக்திகளைக் கூட்டாகத் திட்டமிட்டுப் பயன்படுத்தும் நோக்கத்திற்காக சமுதாயத்தின் உறுப்பினர்கள் அனைவரது பொதுவான கூட்டுறவுடன் அனைவரது தேவைகளையும் நிறைவேற்றுமளவிற்கு உற்பத்தியை விரிவுபடுத்துவதும் மற்றவர்களின் தேவைகளை மட்டுமே நிறைவேற்றும் நிலைமைக்கு முடிவு கட்டுவதும் வர்க்கங்களை அவற்றின் முரண்பாடுகளோடு முழுமையாக அழித்தொழிப்பதும் ஆகிய இவைதான் தனியுடைமையை அழிப்பதன் முக்கிய விளைவுகளாகும்.

கேள்வி 21: சமுதாயத்தின் பொதுவுடைமை முறைமையானது குடும்பத்தின் மீது எவ்வித பாதிப்பை ஏற்படுத்தும்?

பதில்: ஆண் பெண் ஆகியோருக்கிடையே ஏற்படும் உறவானது, சம்பந்தப்பட்டவர்களின் தனிப்பட்ட விஷயம் என்றும், அதில் சமுதாயம் தலையிடக் கூடாது என்றும் அது மாற்றி விடும். தனியுடைமையை அகற்றி விடுவதன் மூலமும், குழந்தைகளுக்கு சமூகக் கல்வி அளிப்பதன் மூலமும் இவற்றின் விளைவாக குழந்தைகள் தங்களது பெற்றோரைச் சார்ந்து நிற்பது மனைவி தனது கணவனைச் சார்ந்து நிற்பது ஆகிய தனியுடைமையின் விளைவாகத் தோன்றிய இருவகையான திருமண அடிப்படைகளை அகற்றி விடுகிறது.

மேலும் கம்யூனிஸ சமுதாயத்தில் பெண்கள் 'பொது உடைமை'யாக ஆக்கப்படுவார்கள் என்று ஒழுக்கம் பற்றிப் பேசும் பிலிஸ்டைன்களின் கூக்குரலுக்கு எமது பதில் இது தான்: பெண்கள் 'பொது உடைமை'யாக ஆக்கப்படும் நிலையானது முற்றும் முழுதாக முதலாளித்துவ சமுதாயத்திற்கே உரித்தானது; தற்போதுள்ள விபச்சார முறை அதன்

முழு விளக்கத்தையும் தருகின்றது. ஆனால் விபச்சாரமானது தனியார் சொத்துடைமையின் அடிப்படையில் அமைந்தது; அந்த அமைப்போடேயே அதுவும் வீழ்ந்து விடும். எனவே, கம்யூனிஸ சமுதாயமானது 'பொது உடைமை'யிலான பெண்கள் என்ற முறையை அறிமுகப் படுத்துவதற்குப் பதிலாக உண்மையில் அதுதான் அந்த முறையை அழித்தொழிக்கிறது.

கேள்வி 22: தற்போதுள்ள தேசிய இனங்களின் மீது கம்யூனிஸ சமுதாயம் எவ்வகையான போக்கைக் கடைப்பிடிக்கும்?

பதில்: மாற்றப்படவில்லை.[4]

கேள்வி 23: தற்போதுள்ள மதங்களிடம் அது எவ்வகையான போக்கைக் கடைபிடிக்கும்?

பதில்: மாற்றப்படவில்லை.[5]

கேள்வி 24: கம்யூனிஸ்டுகள் சோஷலிஸ்டுகளிடமிருந்து எவ்வகையில் வேறுபடுகிறார்கள்?

பதில்: சோஷலிஸ்டுகள் என்று கூறிக் கொள்பவர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

முதல் வகையினரில், பெருந்தொழில் அமைப்பாலும், உலகச் சந்தையாலும், அவற்றால் உருவாக்கப்பட்டுள்ள முதலாளித்துவ சமுதாயத்தாலும், இதற்கு முன்பாகவும், நாளுக்கு நாளும் நசுக்கப்பட்டு வருகின்ற நிலப்பிரபுத்துவ தந்தைவழிச் சமுதாயத்தை ஆதரிப்பவர் அடங்குவர். தற்போதுள்ள சமுதாயத்தின் தீமைகளிலிருந்து அவர்கள் மேற்கொண்ட முடிவெல்லாம், இத் தீமைகளில்லாத நிலப்பிரபுத்துவ, தந்தை வழிச் சமுதாயத்தை திரும்பவும் நிலைநாட்ட வேண்டும் என்பதேயாகும். அவர்களது கருத்துக்கள் அனைத்துமே இந்த முடிவை நோக்கியே அமைந்துள்ளன. பாட்டாளி வர்க்கத்தின் துன்பங்களைக் கண்டு இந்த பிற்

போக்கு சோஷலிஸ்டுகள் கண்ணீர் வடித்தாலும், அவர் களைச் சார்ந்திருப்பதுபோல் தோற்றமளித்தாலும், கீழ்க் கண்ட காரணங்களுக்காக கம்யூனிஸ்டுகளால் முழுமூச்சுடன் எதிர்க்கப்படுவார்கள்:

1. முற்றிலும் சாத்தியமற்ற ஒன்றிற்காகவே அக்குழு முயற்சி செய்து வருகிறது.

2. அவர்கள் நிலப் பிரபுக்கள், கில்டு மாஸ்டர்கள் உற்பத்தி யாளர்கள் ஆகியோரின் மிச்ச சொச்சமான எதேச்சாதிகார நிலப்பிரபுத்துவ அரசர்கள், அதிகாரிகள், ராணுவ வீரர்கள், மத குருக்கள் ஆகியோரின் ஆட்சியை நிறுவ முயற்சி செய் கிறார்கள். அத்தகைய ஆட்சியானது இன்றைய சமுதாயத் தின் தீமைகளைக் கொண்டிரா விட்டாலும், அதனால் முடிந்த அளவு தீமைகளைக் கொண்டு வருவதோடு, ஒரு கம்யூனிச சமுதாயத்தின் மூலம், ஒடுக்கப்பட்ட தொழிலாளி கள் விடுதலை பெறக்கூடிய வாய்ப்பைக் கூட அது தராது.

3. பாட்டாளிகள் புரட்சிகரமானவர்களாகவும், கம்யூனிஸ்டு களாகவும் மாறும் போதெல்லாம் இந்த பிற்போக்கு சோஷலிஸ்டுகள் பாட்டாளி வர்க்கத்திற்கெதிராக முதலாளி வர்க்கத்தோடு இணைந்து நின்று தங்களது சுயரூபத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

இன்றைய சமுதாயம் தவிர்க்க இயலாதபடி உருவாக்கு கின்ற தீமைகளால், அதன் எதிர்காலத்தைப் பற்றிய பயத் தினால் நிகழ்காலச் சமுதாயத்தைப் பின்பற்றுபவர்கள் இரண்டாவது பிரிவில் அடங்குவர். விரும்புவதெல்லாம் இச்சமுதாயத்தினுள்ளேயே அடங்கியுள்ள தீமைகளை அகற்றி விட்டு, தற்போது நிலவும் சமுதாய முறைமையை நிலை நிறுத்த வேண்டும் என்பதேயாகும். இந்த நோக்கத்துடன் ஒரு சிலர் வெறும் சமூகநல நடவடிக்கைகளை அறிவிக் கிறார்கள்; வேறு சிலர் சமுதாயத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்ற பாசாங்குடன், சீர்த்திருத்தத்திற்கான பெரும் திட்டங்களோடு முன் வருகிறார்கள். ஆனால்

உண்மையில் அவர்களது நோக்கமெல்லாம் தற்போதுள்ள சமுதாய அமைப்பின் உயிரோட்டத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதேயாகும். கம்யூனிஸ்டுகளின் எதிரிகளுக்காக சேவை செய்கின்ற, தூக்கியெறியப்பட வேண்டும் என்று கம்யூனிஸ்டுகளால் நோக்கமாக அறிவிக்கப்பட்டுள்ள இந்தச் சமுதாயத்தைப் பாதுகாக்கும் முதலாளித்துவ சோஷலிஸ்டுகளை எதிர்த்து கம்யூனிஸ்டுகள் இடையறாது போராட வேண்டும்.

இறுதியாக, மூன்றாவது வகையினரில் கம்யூனிஸ்டுகள் கூறுகின்ற சில நடவடிக்கைகளை, *கேள்வியில் விளக்கப் பட்டிருப்பதை போன்று, ஆதரிப்பவர்களும் அவற்றை கம்யூனிஸத்திற்கான மாறுதல்களில் ஒரு பகுதியாகக் கருதாமல், இன்றைய சமுதாயத்தின் தீமைகளையும் துன்பங் களையும் அகற்றுவதற்குப் போதுமானதென்று நம்புபவர் களாக இருப்பவர்களுமான ஜனநாயக சோஷலிஸ்டுகள் அடங்குவார்கள்.

இந்த ஜனநாயக சோஷலிஸ்டுகள், தங்களது வர்க்கத்தின் விடுதலைக்கான நிலைமைகளைப் பற்றிப் போதுமான தெளி வில்லாத பாட்டாளி மக்களாகவோ அல்லது ஜனநாயகத்தை வென்றடைவதற்கு முன்பாக, அது உருவாக்குகின்ற சோஷலிச நடவடிக்கைகளுக்கும் முன்பாக பாட்டாளிகளின் நலன்களுடன் ஒத்துப் போகக் கூடிய குட்டி பூர்ஷ்வாக்களா கவோ இருப்பார்கள்.

இதன் விளைவாக, நேரடி நடவடிக்கைகளின் போது கம்யூனிஸ்டுகள் இந்த ஜனநாயக சோஷலிஸ்டுகளோடு

---

* கையெழுத்துப் பிரதியில் அந்த இடத்தில் வெற்றிடம் விடப்பட்டுள்ளது. கேள்வி 18-க்கு கொடுக்கப்பட்டுள்ள பதிலைக் காண்க.

—பதிப்பாசிரியர்கள்

ஒரு வித உடன்பாட்டிற்கு வரவேண்டும்; பொதுவாகவே, ஆளும் வர்க்கமான முதலாளிகளோடு சேர்ந்துகொண்டு கம்யூனிஸ்டுகளை எதிர்க்கும் பணியில் இறங்காமலும், கம்யூனிஸ்டுகளைத் தாக்காமலும் இருந்தால், அவர்களோடு பொதுவாக முடிந்தவரை பின்பற்றக்கூடிய பொதுக் கொள் கையைத் தற்காலிகமாக மேற்கொள்ள வேண்டும். எனினும் இவ்வகையான நடவடிக்கைகளில் உள்ள கூட்டுறவானது, அவர்களோடு உள்ள கருத்து வேறுபாடுகளைப் பற்றிய விவாதத்தை மறுதலிக்கக் கூடாது என்பதும் தெளிவான ஒன்றாகும்.

கேள்வி 25 : இந் நாட்களில், ஏனைய அரசியல் கட்சி களோடு கம்யூனிஸ்டுகள் கொள்ளும் உறவு எத்தகையது ?

பதில் : இந்த உறவானது பல நாடுகளிலும் பல்வேறு வித மாக உள்ளது. இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய முதலாளித்துவ நாடுகளில், பல்வேறு ஜனநாயக் கட்சிகளு டன் கம்யூனிஸ்டுகளுக்குத் தற்காலிகமான பொதுநலன் கள் உண்டு. கம்யூனிஸ்டுகள் பொதுவாகப் போராடிக் கொண்டிருக்கும் சோஷலிஸ நடவடிக்கைகளுக்கு நெருக்க மாக அவர்கள் வரும்போதும், இந்த நடவடிக்கைகள் மிகத் தெளிவாகவும் மிக உறுதியாகவும், பாட்டாளி வர்க்கத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும்போதும், அவை பாட்டாளிகளை அதிகமாகச் சார்ந்திருக்கும் போதும் இந்த பொதுநலன்கள் அதிகரிக்கின்றன.

உதாரணமாக, இங்கிலாந்தில் உழைக்கும் வர்க்கத்தினரை உறுப்பினர்களாகக் கொண்ட சார்டிஸ்டுகள்[6] குட்டி பூர்ஷ்வா ஜனநாயகவாதிகளை விடவும், தீவிரவாதிகள் என்று கூறப் படுபவர்களைக் காட்டிலும் கம்யூனிஸ்டுகளோடு மிக நெருக்க மாக உள்ளனர்.

ஒரு ஜனநாயக பூர்வமான அரசியலமைப்புச் சட்டம் நிறு வப்பட்டுள்ள அமெரிக்காவிலோ இந்த அரசியலமைப்புச்

சட்டத்தையே முதலாளிகளுக்கு எதிராகத் திருப்பிவிடக்கூடிய அதனைப் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்காகப் பயன் படுத்துகின்ற கட்சியோடு அதாவது தேசிய விவசாய சீர் திருத்தவாதிகளோடு, கம்யூனிஸ்டுகள் பொது நலன்களைக் கொண்டிருக்க வேண்டும்.

ஸ்விட்சர்லாந்தில் கூட்டுக் கட்சியாக இருப்பினும் கம்யூனிஸ் டுகள் உறவுகொள்ளக் கூடியவர்களாக இருக்கும் ஒரே கட்சி யாக தீவிரவாதிகள் கட்சி உள்ளது. இந்தத் தீவிரவாதி களிலும் வாடு மற்றும் ஜெனிவா பகுதியிலுள்ளவர்களே மிகவும் முன்னேறியவர்களாக உள்ளனர்.

இறுதியாக, ஜெர்மனியில் முழுமையான முடியாட்சிக்கும் முதலாளிகளுக்குமிடையே தீர்மானமான போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனினும் முதலாளி வர்க்கம் ஆட்சிக்கு வராமல் தங்களுக்கும் முதலாளி வர்க்கத் திற்கும் இடையே தீர்மானமான போராட்டத்தில் ஈடுபட முடியாது என்பதாலும், முதலாளி வர்க்கத்தை வெகு விரை வில் ஆட்சியதிகாரத்திலிருந்து தூக்கியெறிவதற்காகவும், கம்யூனிஸ்டுகள் முதலாளி வர்க்கம் ஆட்சிக்கு வருவதற்கு உதவி செய்யவேண்டும். எனவே அரசாங்கங்களுக்கு எதி ரான போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் எப்போதும் மிதவாத முதலாளிகள் கட்சியையே ஆதரிக்க வேண்டும். எனினும், முதலாளி வர்க்கத்தின் சுய ஏமாற்றுகளிலிருந்தும், முதலாளி களின் வெற்றியினால் பாட்டாளி வர்க்கத்திற்குக் கிடைக்கு மென்று கூறப்படும் நன்மைகளைப் பற்றிய கவர்ச்சியான உறுதிமொழிகளிலிருந்தும் கம்யூனிஸ்டுகள் தங்களைப் பாது காத்துக் கொள்ள வேண்டும். முதலாளி வர்க்கத்தின் வெற்றி யிலிருந்து கம்யூனிஸ்டுகள் பெறப்போவதெல்லாம் இவை தான்.

1. கம்யூனிஸ்டுகள் தங்களது கோட்பாடுகளைப் பரப்பு வதற்கும், விவாதிப்பதற்கும், பாதுகாப்பதற்கும், உதவி செய்யும் வகையில் கிடைக்கவிருக்கும் பல்வேறு சலுகை

களும், அதன் மூலம் பாட்டாளி வர்க்கத்தைப் பின்னிப் பிணைந்த, போர்த்திறன் மிக்க, ஒருங்கிணைந்த வர்க்கமாக இணைப்பதற்கு வாய்ப்பளிக்கும்.

2. எதேச்சாதிகார அரசாங்கங்கள் விழுந்த அன்றிலிருந்தே முதலாளிகளுக்கும் பாட்டாளிகளுக்கும் இடையேயான போராட்டம் தொடரும் என்ற உறுதியும், அன்றிலிருந்து முதலாளி வர்க்கம் ஆட்சியிலிருக்கும் நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகளின் அதே கொள்கைதான் இந்த நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகளின் கொள்கையாகவும் இருக்கும்.

□

1847 அக்டோபரில் எழுதப்பட்டது. தனிப்பதிப்பாக முதலில் 1914-ல் வெளியிடப்பட்டது.

ஜெர்மன் மூலத்தில் இருந்து ஆங்கிலத்திலும், ஆங்கிலத்திலிருந்து தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டது.

# குறிப்புகள்

1. எங்கெல்ஸ் கம்யூனிஸ்ட் லீகிற்காக 1847ம் ஆண்டில் கேள்வி—பதில் வடிவத்தில் இரண்டு நகல் திட்டங்களை ஜுன், அக்டோபர் மாதங்களில் எழுதினார். இரண்டாவதாக எழுதப்பட்ட, 'கம்யூனிஸத்தின் கோட்பாடுகள்' என்றழைக்கப்பட்ட பிரசுரம் முதலில் 1914ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. முன்னதாக எழுதப்பட்ட 'கம்யூனிஸ நம்பிக்கை வாக்குமூலத்தின் நகல் அறிக்கை' என்ற பிரசுரம் 1968ஆம் ஆண்டில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. இது 1969 ஆண்டில் ஹம்பர்க்கில் கம்யூனிஸ்ட் லீகின் முதல் காங்கிரசோடு தொடர்புடைய ஏனைய நான்கு ஆவணங்களையும் உள்ளடக்கியதாக 'கம்யூனிஸ்ட் லீகின் தொடக்க ஆவணங்கள்' என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

1847 ஜுனில் கம்யூனிஸ்ட் லீகின் துவக்கக் காங்கிரஸான ஜஸ்ட் லீக் காங்கிரஸில், லீகின் அணிகளில் விவாதிப்பதற்காக 'நம்பிக்கை வாக்குமூல' நகல் ஒன்றை முன்வைப்பதென்று முடிவு செய்யப்பட்டது. சமீபத்தில் வெளிவந்துள்ள அந்த ஆவணமானது இந்த நகலறிக்கையாகத்தான் இருக்க வேண்டும். இந்த இரு ஆவணங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது. 'கம்யூனிஸத்தின் கோட்பாடுகள்' என்ற நகல் அறிக்கையானது, முந்தைய நகலின் திருந்திய வடிவமாகவே தோன்றுகிறது. 'கம்யூனிஸத்தின் கோட்பாடுகள்' என்ற இப்பிரசுரத்தில் எங்கெல்ஸ் 3 கேள்விகளுக்கு பதிலளிக்காமல், அவற்றில் இரண்டில் மாற்றப்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். இவை முந்தைய நகலில் கொடுக்கப்பட்டுள்ள பதில்களை நிச்சயமாகக் குறிப்பவையே ஆகும்.

திட்டத்திற்கான புதிய நகல் அறிக்கை, கம்யூனிஸ்ட் லீகின் பாரீஸ் வட்டத்தின் முன்னோடிக் குழுவினரின் குறிப்புகளினடிப்படையில் எங்கெல்ஸால் எழுதப்பட்டதாகும். 1847ஆம் ஆண்டு அக்டோபர் 22ம் நாளன்று நடந்த குழுக்கூட்டத்தில் 'உண்மை சோஷலிஸ்ட்' ஆன மோஸஸ் ஹெஸ் அவர்கள் தயாரித்த நகல் திட்டத்தின் மீது எங்கெல்ஸ் தொடுத்த

கடுமையான விமர்சனங்களுக்குப் பிறகு, அத்திட்டம் நிராகரிக்கப்பட்டபின், மேற்குறிப்பிட்ட குறிப்புகள் முடிவு செய்யப்பட்டன.

'கம்யூனிஸத்தின் கோட்பாடுகள்' என்ற பிரசுரத்தைத் தொடக்கப்பூர்வமான நகல் திட்டமென்று கருதிய எங்கெல்ஸ் 1847ஆம் ஆண்டு நவம்பர் 23-24ல் மார்க்ஸுக்கு எழுதிய கடிதத்தில், இந்த கேள்வி—பதில் வடிவத்தை கைவிட்டு விட்டு, அறிக்கை வடிவத்தில் ஒரு திட்டத்தை தயாரிப்பது நல்லது என்று கருத்துத் தெரிவித்திருந்தார்.

1847ம் ஆண்டு நவம்பர் 29 முதல் டிசம்பர் 8 வரை நடந்த கம்யூனிஸ்ட் லீகின் 2வது காங்கிரஸில் கம்யூனிஸத்தின் அடிப்படை விஞ்ஞானக் கோட்பாடுகளை மார்க்ஸும் எங்கெல்ஸும் ஆதரித்துப் பேசினார்கள். அதன் அடிப்படையில் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை வடிவிலான திட்டத்தை உருவாக்கும் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த அறிக்கையை உருவாக்கும் போது, மார்க்ஸியத்தின் ஸ்தாபகர்களான மார்க்ஸும் எங்கெல்ஸும் 'கம்யூனிஸத்தின் கோட்பாடுகள்' பிரசுரத்தில் விவரிக்கப்பட்டிருந்த கருதுகோள்களையே பெரிதும் பயன்படுத்தினார்கள்.

2. மார்க்ஸும் எங்கெல்ஸும் பிற்காலத்தில் அவர்கள் எழுதிய நூல்களில், 'உழைப்பின் விற்பனை', 'உழைப்பின் மதிப்பு' மற்றும் 'உழைப்பின் விலை' ஆகிய கருது கோள்களுக்கு 'உழைப்புச் சக்தியின் விற்பனை', 'உழைப்புச் சக்தியின் மதிப்பு' மற்றும் 'உழைப்புச் சக்தியின் விலை' என்ற மிகச் சரியான கருதுகோளைப் பயன்படுத்தினர். இக்கருதுகோள்கள் முதலில் மார்க்ஸால் அறிமுகப்படுத்தப்பட்டன.

3. 'கம்யூனிஸ நம்பிக்கை வாக்குமூலத்திற்கான நகலறிக்கையில் இதே கேள்விக்கு (கேள்வி எண் : 12) கொடுக்கப்பட்டுள்ள பதில் வருமாறு: ''பாட்டாளி வர்க்கத்திற்கு நேர் மாறாக, சென்ற (பதினெட்டாம்) நூற்றாண்டில் எல்லா இடங்களிலும் இருந்த, தற்போது ஆங்காங்கே வாழ்ந்து

வருகின்ற கைவினைஞர் என்று கூறப்படுபவர் பெரும்பாலும் தற்காலிகமான பாட்டாளியாகவே உள்ளனர். அவரது நோக்கமெல்லாம் தானாகவே மூலதனத்தை திரட்டி, அதன்மூலம் ஏனைய தொழிலாளிகளைச் சுரண்டுவதேயாகும். தற்போதும் கில்டுகள் இருக்கும் பகுதிகளிலும், கில்டு கட்டுப் பாடுகளிலிருந்து கிடைத்த விடுதலை கைவினைத் தொழி லில் தொழிற்சாலை முறையை இதுவரையிலும் புகுத்தாத பகுதிகளிலும், இன்னும் கடுமையான போட்டிக்குள் ஆட் படாத பகுதிகளிலும், அவர் சில நேரங்களில் இந்த நோக் கத்தை நிறைவேற்றிக் கொள்கிறார். ஆனால் கைவினைத் தொழில்களில் தொழிற்சாலை முறை புகுத்தப்பட்ட உட னேயே, போட்டியானது முழுதாக நடைமுறைப் படுத்தப் பட்ட உடனேயே, இவர்களின் இந்த நோக்கம் தகர்ந்தது. கைவினைஞர் மேலும் மேலும் பாட்டாளியாகவே மாறுகிறார். எனவே கைவினைஞர் முதலாளியாகவோ அல்லது பொது வாக நடுத்தர வர்க்கமாகவோ அல்லது போட்டியின் விளை வாக பாட்டாளியாகவோ (இவ்வாறு தான் பெரும்பாலும் நடைபெறுகிறது) மாறுவதன் மூலம் தன்னை விடுவித்துக் கொள்கிறார். இந்த வகையில் அவர் பாட்டாளி வர்க்க இயக்கத்தில்; அதாவது பெரும்பாலும் உணர்வுள்ள கம்யூ னிஸ இயக்கத்தில் சேருவதன் மூலம் தன்னை விடுவித்துக் கொள்கிறார்.

4. 'மாற்றப்படவில்லை' என்று எங்கெல்ஸ் கொடுத்துள்ள குறிப்பானது, அவர் ஜூன் மாதம் எழுதிய நகலறிக்கை யின் 21வது கேள்வியையே குறிப்பதாகும். அதில் கொடுக் கப்பட்டுள்ள பதிலாவது : ''பல்வேறு நாடு வேறுபாடுகளும், வர்க்க வேறுபாடுகளும் அவற்றின் அடிப்படையான தனி யுடைமை அழிவதன் மூலம் மறைந்து விடுவதைப் போலவே சமுதாயத்தின் குறிக்கோள்களுக்கேற்ப தங்களை இணைத் துக் கொண்ட மக்களின் தேசிய இனங்கள் ஒன்றோடொன்று இணையுமாறு அவர்களை நிர்ப்பந்திக்கும். அவர்கள் தங் களது தேசிய இனங்களையும் கலைத்துக் கொள்வார்கள்.''

5. அதைப்போன்றே, இந்தப் பதிலானது ஜூன் மாத நகல் அறிக்கையில், 22வது கேள்விக்கான பதிலைக் குறிப்ப தாகும். அப் பதிலாவது : ''மதங்கள் அனைத்துமே தனி மனிதர்கள் மற்றும் மக்கள் குழுவினரது வளர்ச்சியின் வர லாற்றுப் படிநிலைகளின் வெளிப்பாடாகவே இருந்து வந் துள்ளது. ஆனால் கம்யூனிஸமானது மதங்கள் அனைத் தையும் தேவையற்றதாகச் செய்து, அவற்றின் மறைவுக்கு வழி செய்யும் வரலாற்று ரீதியான வளர்ச்சியின் படிநிலையே யாகும்.''

6. சார்டிஸ்டுகள், 1830 முதல் 1850ஆம் ஆண்டுகளின் நடுப் பகுதிவரை நடைபெற்ற பிரிட்டிஷ் தொழிலாளர்களின் அர சியல் இயக்கத்தில் பங்கு பெற்றவர்களாவர். மக்கள் சாச னம் ஒன்றை மேற்கொள்வது, அனைத்து மக்களுக்கும் வாக்குரிமை, மற்றும் தொழிலாளர்கள் அனைவருக்கும் வாக்குரிமையை உறுதிப்படுத்தல் ஆகியவற்றைக் கொண்ட தாகவே இவர்களது கோஷங்கள் இருந்தன. சார்டிஸ்டு இயக்கத்தை, உலகத்தின் முதலாவது பரந்து பட்ட, உண்மை யில் 'வெகுஜனங்களைக் கொண்ட, அரசியல் ரீதியாக உருவாக்கப்பட்ட பாட்டாளிவர்க்கப் புரட்சிகர இயக்கம்' என்று லெனின் விவரித்தார். (தொகுக்கப்பட்ட நூல்கள்— ஆங்கிலப்பதிப்பு, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1965, தொகுதி. 29, பக். 309)

இங்கிலாந்தின் தொழில்துறை, வியாபாரத்துறை ஏகபோக மானது வலிமையடைந்தாலும், தொழிலாளி வர்க்கத்தின் மேல்தட்டுப் பகுதியினரை (பிரபுத்துவத் தொழிலாளர்கள்) பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் தனது கொள்ளை லாபத்தி லிருந்து பங்களித்து அதன் கைப்பாவையாக ஆக்கிக் கொண்டதாலும், சார்டிஸ்ட் இயக்கமானது வீழ்ச்சியடைந் தது. குறிப்பாக, சார்டிஸ்ட் இயக்கத்திற்கு தொழிற்சங்கத் தலைவர்கள் ஆதரவளிக்க மறுத்ததால் மேற்குறிப்பிட்டது போல் இந்த இரு போக்குகளும் தொழிலாளி வர்க்கத்தின் மேல் தட்டுப் பகுதியிலிருந்த சந்தர்ப்பவாதப் போக்குகளை வலுப்படுத்தியது.